1975 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீண்ட பட்டியலாக இருந்தால் பின்னால் அவைமுன் வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மலிவு விலையில் அரிசி தருவது என்பது தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான முறையில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப் பேற்றுக்கொண்டு காரியம் ஆற்றுகிறார்கள் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

Wages for Handloom Weavers

* 385 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether a representation has been received from the Tamil Nadu State Handloom Weavers' Association in August 1974 in regard to enhancing the wages of handloom weavers ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :—

(அ) ஆம்.

(இ) கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்படுவதற்கென அமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுவினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை எண். 559, தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, 26-7-74-ன் படி கைத்தறி நெசவாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் அண்மையில்தான் அறிவிக்கப்பட்டதால் அவற்றை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தின் கோரிக்கையின் பேரில் இப்போழுது மாற்றி அமைப்பது உசிதமாகாதெனக் கருதப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த அறிக்கை யின்படி நெசவாளர்களில் ஏதாவது தரம் பிரிக்கப்பட்டு இருக்கிறதா ? இன்ன வேலை செய்கிறவர்கள், இன்ன தரம், இன்ன கூலி என்று கூலி நிர்ணயம் செய்து இருக்கிறார்களா, அப்படி அளிக்கப்பட்ட கூலியை அவர்கள் பெறும் வகையில் கட்டாயப்படுத்தக்கூடிய திட்டம் இருக்கிறதா ? அதை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வந்து நெசவாளர்களுக்கு வேண்டிய உதவிகளை, நெசவாளர்களின் துயர்துடைக்க அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் :- நெசவாளர்கள் மத்தியில் நிறையத் தரம் இருக்கிறது.

Ordinary variety, Reeds 18 to 20, Reeds, Shuttle 1-6, Pedal 2, two ply varieties, per pair of check varieties, casement, art silk × cotton mixture), art silk..............

[1975 மார்ச் 19

எல்லாவற்றிற்கும் தனியாக ரகங்கள் பிரிக்கப்பட்டு, அந்த அளவிலே கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. இதுவரையிலும் கூலியை நிர்ணயம் செய்யும் தன்மை இல்லை. அதிலே தொழில் அதிபர்களும் இருக்கிறார்கள். அதேபோல் தொழிலாளர் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் சேர்ந்து கூலி உயர்வைக் கவனித்துக்கொள்கிறார்கள். இது விரைவில் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அட்ஜெர்ன்மெண்ட் மோஷன் முடிந்த பிறகு சொல்லுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இப்போது ஸீரோ அவர் இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸீரோ அவர் இல்லை.

(திரு. எம். சுரேந்திரன், திரு. கோவை செழியன் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்தவுடன் எழுப்புங்கள்.

2. நடைமுறைக் கேள்வி

வினா நேரம் முழுவதையும் வினாக்கள் கேட்கவே பயன்படுத்த அதிக வினாக்கள் எடுத்துக்கொள்வது குறித்து

திரு. கோவை செழியன் : கேள்வி நேரம் குறித்து பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி சொல்லுங்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, 9-முதல் 10-மணி வரை கேள்வி நேரம் என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது எங்களுடைய உரிமை. இதிலே கை வைப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் கேள்வி நேரம் முடிந்து விட்டால் மறு

அலுவலுக்குப் போகலாம். அவர்கள் தேர்ந்து எடுக்கிற கேள்விகள் குறைந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். அது ½ மணியில் முடிந்து விடுகிறது. முன்பெல்லாம் நிறையக் கேள்விகள் போட்டு இருப்பார்கள், அவற்றை மெயில் வேகத்தில் எடுத்துக்கொண்டு முடித்து விடுவீர்கள். இப்போது மிகக் குறைந்த கேள்விகளே வருகின்றன. அதுவும் தொகுதி பற்றிய கேள்வியாக வருகிறது. "கும்மிடிப்பூண்டியில் குளம் வெட்டினார்களா" என்று வருகிறது. அப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் ஓரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, பாலிஸி சம்பந்தமான கேள்விகளை அனுமதிக்கவேண்டும். நாளைய தினத்திலிருந்து 10 கேள்விகள் அதிகமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்

வறட்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசு உதவியை கோரப் போவதில்லை என முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **"Serious situation arising out of Hon'ble Chief Minister's Statement in the House on 17th March 1975 disowning any aid for drought from Centre resutling in suffering the drought affected millions in Tamil Nadu".**

என்ற பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஜே. ஜேம்ஸ், கே.டி.கே. தங்கமணி, ஆலடி அருணா ஆகியோர் 41-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையை ஒத்தி வைத்து விவாதிக்கக் கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்க வேண்டும். திரு. ஆலடி அருணா.....

*திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிலிருந்து இப்போது நிதி அமைச்சராக இருக்கிற திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசில் நிதி அமைச்சராக நீடிக்கிற வரையில் தமிழ் நாடு அரசு நிதி கேட்காது என்ற தீவிரமான முடிவை இந்த மன்றத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தத் தீவிரமான முடிவை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளியிட்டதன் காரணமாக தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி மக்கள் மனதிலே ஒரு பெரிய அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

நாட்டில் பஞ்சம், பற்றாக்குறை ஆகியவை பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டு இருக்கிறது. வரலாறு காணாத அளவுக்கு இந்த நிலைமையேற்பட்டிருக்கிறது. எனவே, அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் இந்தப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியும்,